**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.4/2024**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.1** |
| **Name** | **:** | **திரு. சீனிவாசன்** |
| **Father's Name** | **:** | **திரு. தேவராஜன்** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**எதிரி ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.03.2026.**

**முதல் விசாரணை -**

நான் தற்போது வெம்பாக்கம் வட்டம், சித்தாத்தூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 2011 ஆம் வருடம் மேல்நெமிலி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராகவும், செங்காடு கிராமத்தில் கூடுதல் பொறுப்பு கிராம நிர்வாக அலுவலராகவும் பணிபுரிந்து வந்தேன். 21.12.2011 அன்று காலை சுமார் 8.00 அல்லது 8.30 மணியளவில் செங்காடு கிராமத்தில் நான் பொறுப்பு கிராம நிர்வாக அலுவலராக பணியலிருந்த போது, மாசிலாமணி என்பவர் முனிசாமி என்பவரின் நிலத்தில் உள்ள சூளை பள்ளத்தில் ஒரு பிணம் இருக்கிறது

என்றும், அதனை நீங்கள் சென்று பாருங்கள் என்றும் எனக்கு தகவல் கொடுத்தார். நானும், என்னுடைய உதவியாளரும் சம்பவ இடத்திற்குச் சென்றோம். அங்கு அடையாளம் தெரியாத வெட்டுக் காயங்களுடன் பாதி மண் மூடியதும், பாதி மண் மூடாததுமாக ஒரு பிணம் அந்த சூளை பள்ளத்தில் இருந்தது. நான் கிராம உதவியாளரை சம்பவ இடத்திலேயே நிறுத்தி வைத்துவிட்டு, நான் அனக்காவூர் காவல் நிலையத்திற்கு சென்று ரிப்போர்ட் கொடுத்தேன்.

அரசு தரப்பு வழக்கறிஞர், சாட்சியிடம் புகாரை பற்றி கேட்ட போது, புகாரை அரசு தரப்பு சான்றாவணமாக குறியீடுச் செய்ய முற்பட்ட போது, அந்த ஆவணம் நகல்களாக இருக்கின்ற காரணத்தினாலும், மேலும், இதே வழக்குடன் தொடர்புடைய பிரிக்கப்பட்ட மற்றொரு வழக்கு (S.C.No.38/2014, Crime No.468/2011) Non Bailable Warrant Stage-ல் நிலுவையில் உள்ளதால் அசல் ஆவணங்களை தாக்கல் செய்வதற்காக, முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional Sessions Judge,
Arani.